# Eastern University, Sri Lanka
## Faculty of Arts and Culture
## 4th Year 2nd Semester Special Degree Examination in Economics (2011/12 Batch)
## 2014/2015 (December, 2017)

## ECS 4223 Current Issues in World Economy

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக. நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

1.

i. உலக சனத்தொகைக்கட்டமைப்பின் மாற்றத்தின் போக்கினை சுருக்கமாக விளக்குக. 07 புள்ளிகள்

ii. உலக சனத்தொகை வளர்ச்சிப்போக்கானது எதிர்கால சந்ததியினரின் அபிவிருத்தி இலக்குகளின் அடைவு மட்டத்தினை எவ்வாறு பாதிக்குமென சுருக்கமாக கூறுக. 10 புள்ளிகள்

iii. "உலக சனத்தொகை அழுத்தமும் (Pressure of Population Growth) அதனுடன் தொடர்புபட்ட தாக்கங்களும் மேலைத்தேய நாடுகளால் முன்வைக்கப்பட்ட மிகைப்படுத்தப்பட்ட கொள்கையாகும்" இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றீரா? ஆராய்க. 08 புள்ளிகள்

மொத்தம் 25 புள்ளிகள்

2.

i. வெளிநாட்டு உதவி (Foreign Aid) என்றால் என்ன? உலக நாடுகளால் கையாளப்படும் வெளிநாட்டு உதவிகளின் வகைகளை சுருக்கமாக விளக்குக. 08 புள்ளிகள்

ii. உலக நாடுகளால் கையாளப்படும் வேளிநாட்டு உதவிகளின் நோக்கங்களையும், அதன்மூலமான சாதக மற்றும் பாதக பொருளாதார அம்சங்களையும் பட்டியலிட்டு சுருக்கமாக விளக்குக. 08 புள்ளிகள்

iii. வெளிநாட்டு உதவியினை செயற்றினாக பயன்படுத்தி தனது பொருளாதாரத்தினை கட்டியெழுப்பிய நாடொன்றின் அனுபவத்தினை சுருக்கமாக கூறுக. 09 புள்ளிகள்

மொத்தம் 25 புள்ளிகள்

3.

i. அபிவிருத்தியை நோக்கி பயணிக்கின்ற நாடுகள் எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை சுருக்கமாக கூறுக. 08 புள்ளிகள்

ii. உலக சுற்றுலாத்துறையின் அபரித வளர்ச்சியானது நிலைத்து நிற்கும் சுற்றுச்சூழல் அபிவிருத்தியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என சுருக்கமாக விளக்குக. 09 புள்ளிகள்

iii. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக உலகநாடுகள் கையாளும் தந்திரோபாய நடவடிக்கைகளை பட்டியலிட்டு விளக்குக. 08 புள்ளிகள்

மொத்தம் 25 புள்ளிகள்

4.

i. ஊழிய நகர்வு (Labor Migration) என்றால் என்ன? நாடுகளிடையே காணப்படும் ஊழிய நகர்வின் வகைகளை சுருக்கமாக விளக்குக். 08 புள்ளிக

ii. நாடுகளிடையே காணப்படும் ஊழிய நகர்வின் காரணமாக ஏற்படும் சாதக மற்றும் பாதகமான பொருளாதார தாக்கங்களை விளக்குக. 09 புள்ளிக

iii. ஊழிய நகர்வின் மூலமான அந்நியச்செலாவணி உட்பாய்ச்சலின் பொருளாதார தாக்கங்களை சுருக்கமாக விளக்குக. 08 புள்ளிக

மொத்தம்

5.

i. சர்வதேச வர்த்தக நடவடிக்கை மூலமாக உலக நாடுகள் அனுபவிக்கும் சாதக மற்றும் பாதகமான அம்சங்களை சுருக்கமாக விளக்குக. 08 புள்ளிக

ii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரியானது நாடுகளிடையேயான வர்த்தக நடவடிக்கைளின்போது ஏன் கையாளப்படுகிறது எனபதை சுருக்கமாக விளக்குக. 08 புள்ளிக

iii. உலக நாடுகளால் கையாளப்படும் வரியல்லாத வர்த்தக கட்டுப்பாட்டு நடைமுறைகளை பட்டியலிட்டு அவற்றில் மூன்றினை சுருக்கமாக விளக்குக. 09 புள்ளிக

மொத்தம்

6.

i. வெளிநாட்டு நேரடி முதலீடு என்றால் என்ன? வெளிநாட்டு நேரடி முதலீட்டில் பல்தேசியக்கம்பனிகளின் வகிபாகங்கள் எவை என சுருக்கமாக கூறுக? 07 புள்ளிக

ii. பல்தேசியக்கம்பனிகளின் வளர்ச்சி மற்றும் அவற்றின பொருளாதார பலம் எனபவற்றிற்கான காரணங்களை விளக்குக. 10 புள்ளிக

iii. உலக உற்பத்திப்பகிர்வு (Global Production Sharing) மூலமான வர்த்தக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை தற்போது நாடுகள் எவ்வாறு கையாள்கின்றன என உதாரணங்கள் மூலம் விளக்குக. 08 புள்ளிக

மொத்தம்